



# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5






www.dhinatamil.com — மாற்றத்தின் ஆரம்பம் — dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு . 17.02.2026 . மலர் 04 . இதழ் 47. செவ்வாய்க்கிழமை | dhinatamil | . NAGERCOIL EDITION . 17.02.2026 . VOL 04 . ISSUE 47. TUESDAY . 4 PAGES . Rs. 5


## அருவருப்பான கருத்தை வெளியிடுவதா?

# திரிஷா பாய்ச்சல்!


## மன்னிப்பு கேட்டார் நயினார்!!

சென்னை

"அன்றைக்கு அது தவறி வந்த ஒரு வார்த்தை. உண்மையில் யாரேனும் இதில் வருத்தப்படுவார்களேயானால், என்னுடைய வருத்தத்தை நான் மனப்பூர்மாக தெரிவித்துக் கொள்கிறேன்" என நடிகை த்ரிஷா குறித்த பேச்சுக்கு தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் மன்னிப்புக் கோரினார்.

சில நாட்களுக்கு முன்பு விஜய் - த்ரிஷா குறித்து பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் பேசியது பெரும் சலசலப்பை உருவாக்கியுள்ளது.

இதுகுறித்து நடிகை த்ரிஷாவின் வழக்கறிஞர் நித்யேஷ் நடராஜ் வெளியிட்ட அறிக்கையில், 'எனது



கட்சிக்காரரும், திரைப்பட நடிகையுமான த்ரிஷா கிருஷ்ணனின் அறிவுறுத்தலின் பேரில், பின்வருவனவற்றைப் பதிவு செய்ய இந்த அறிக்கையை வெளியிடுகிறேன்:

1. எனது கட்சிக்காரரைப் பற்றி ஊடகங்களில் பரவி வரும் அருவருப்பான கருத்து குறித்து இந்த அறிக்கையை வெளியிடப்படுகிறது.

2. மாநில அரசியலில் உயர் பதவியில் இருக்கும் ஒருவர் இத்தகைய அருவருப்பான மற்றும் பொருத்தமற்ற கருத்தை வெளியிடுவார் என்று எனது கட்சிக்காரர் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை.

3. எனது கட்சிக்காரர் எந்த அரசியல் கட்சியுடனும் இணைந்திருக்கவில்லை என்பதையும், அவ்வாறு இருக்கவும் விரும்பவில்லை என்பதையும் மிகத் தெளிவாகக் கூறுகிறார். மேலும், எனது கட்சிக்காரர் கடந்த காலங்களில் இருந்தது போலவே, அரசியலில் எப்போதும் நடுநிலையான நிலைப்பாட்டையே எடுத்துள்ளார்.

4. எனது கட்சிக்காரர் எந்தவொரு அரசியல் செயல்பாட்டிலும் ஈடுபடாமல், தனது தொழிலில் மட்டுமே கவனம் செலுத்த விரும்புகிறார். மிக முக்கியமாக, ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கையை ஒருபோதும் பொது விமர்சனம் அல்லது விவாதப் பொருளாக மாற்றக்கூடாது என்பது பொதுவான நிலைப்பாடு. மேலும், உயர் பதவிகளை வகிக்கும் நபர்கள் பொது விவாதத்தில் பொறுப்பையும், சமநிலையையும் பராமரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

5. எனது கட்சிக்காரரின் பெயரை அவருடன் தொடர்பற்ற விஷயங்களில் இணைக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது' என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய நயினார் நாகேந்திரன், "என்னுடைய அரசியல் வாழ்க்கையில் எந்தவொரு தனிநபர் விமர்சனத்தையும் நான் அனுமதிப்பதில்லை. நானும் அவ்வாறு பேசியதில்லை. அன்றைக்கு அது தவறி வந்த ஒரு வார்த்தை. அது குறித்து எங்கள் கட்சியின் அகில இந்திய மகளிரணி தலைவி வானதி சீனிவாசன் என்னிடம் பேசினார். நேற்று முன்னாள் தலைவர் அண்ணாமலையின் வீட்டுக்குச் சென்றபோது இந்த விவகாரம் குறித்து பேசினார்.

உண்மையில் யாரேனும் இதில் வருத்தப்படுவார்களேயானால், என்னுடைய வருத்தத்தை நான் மனப்பூர்மாக தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

தன் மீதான தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரனின் கருத்துக்கு, நடிகை த்ரிஷா வழக்கறிஞர் மூலமாக கண்டனத்தை பதிவு செய்துள்ளார்.

# மகளிருக்கு மகிழ்ச்சி : முடக்க நினைத்தவர்களுக்கு அதிர்ச்சி

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!!

திருச்சி, பிப்.17-

"மகளிர் உரிமைத் தொகையாக ரூ.5,000 பெற்ற பெண்கள் மகிழ்ச்சியில் உள்ளனர். மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை முடக்க நினைத்தவர்கள் அதிர்ச்சியில் உள்ளனர்," என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருச்சி மாவட்டம், லால்குடி நகராட்சியில் ரூ.31.89 கோடி ஓடிமதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் மற்றும் ரூ.4.69 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நகராட்சி அலுவலக கட்டிடம் திறப்பு விழா நடைபெற்றது. தமிழக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமை வகித்தார்.

சிறப்பு விருந்தினராக பங்கேற்ற தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் புதிய பேருந்து நிலையம், நகராட்சி அலுவலகம் ஆகியவற்றை திறந்து வைத்து பேசியதாவது: லால்குடி நகரத்தில் புதிய பேருந்து நிலையம், நகராட்சி அலுவலகம் திறந்து வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். திருச்சி மாவட்டத்தில் திருச்சி மாநகராட்சிக்கு அடுத்தப்படியாக வேகமாக வளர்ந்து வரும் ஊர் லால்குடி தான்.

தமிழுக்காக தலைவர் கலைஞர் ரயில் தண்டவாளத்தில் தலைவைத்து படுத்த கல்லக்குடி இருப்பது லால்குடி பகுதி என்பதில் பெருமை கொள்கிறேன். திமுக ஆட்சிக்கு 3 அமைச்சர்களை தந்த ஊர் லால்குடி. தலைவர் கலைஞருக்கு நெருக்கமானவர் அன்பில் தர்மலிங்கம், முதல்வர் ஸ்டாலினுக்கு நெருக்கமான அமைச்சர் கே.என்.நேரு, எனக்கு பக்கபலமாக இருக்கும் அன்பில் மகேஸ் ஆகியோர் லால்குடியைச் சேர்ந்தவர்கள்.

இன்று நகராட்சி நிர்வாகம், பள்ளிக்கல்வித்துறை ஆகிய 2 முக்கிய துறைகளுக்கு அமைச்சர்கள் தந்தது லால்குடி தான். அவர்கள் இருவரும் திருச்சி மாவட்ட வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் முதல்வரிடம் கேட்டுப் பெறுகின்றனர்.

அதேபோல எம்எல்ஏ சவுந்தரபாண்டியனும் இந்தப்பகுதிக்காக பாடுபடுகிறார். திருச்சி பஞ்சப்பூரில் மிகப்பெரிய பேருந்து முனையம் கட்டிய நேரு அவரது சொந்த ஊரில் பேருந்து கட்டமால் விடுவாரா? முதல்வரிடம் தெரிவித்து பேருந்து நிலையம் மட்டுமின்றி நகராட்சி அலுவலகமும் கொண்டு வந்துள்ளார்.

லால்குடி மட்டுமல்ல தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் திராவிட மாடல் ஆட்சி நடத்தும் முதல்வர் பல்வேறு திட்டங்களை நடைமுப்படுத்தி வருகிறார். மகளிர் உரிமைத்




திட்டத்தின் கீழ் 1.31 கோடி மகளிருக்கு மாதம் ரூ.1,000 வழங்கி வந்தார். இந்தத்திட்டத்தை தேர்தலுக்குள் எப்படியாவது நிறுத்தி விட வேண்டும் என சிலர் சூழ்ச்சி செய்தனர். ஆனால் முதல்வர் ஸ்டாலின், என் மக்களுக்கு நான் கொடுத்த ஆயிரம் ரூபாயை நிறுத்த முயற்சித்தால் நான் ரூ.5,000 தருவேன்' என்று, பிப்., மார்ச், ஏப்ரல் ஆகிய 3 மாதங்கள் சேர்த்து ரூ.3,000 கோடை கால சிறப்புத் தொகையாக ரூ.2,000 என ரூ.5,000 வழங்கி உள்ளார்.

மீண்டும் திமுக ஆட்சி அமைந்ததும் மகளிருக்கான உரிமைத் தொகை ரூ.2,000 உயர்த்தி தருவேன் என முதல்வர் வாக்குறுதி அளித்துள்ளார். முதல்வர் அளித்த வாக்குறுதியை செய்து கொடுப்பார் என்ற நம்பிக்கை உங்களிடம் உள்ளது. இன்று தமிழ்நாடு மக்கள் குறிப்பாக மகளிர் மிகுந்த மகிழ்ச்சியில் உள்ளனர்.

இந்தத்திட்டத்தை முடக்க நினைத்தவர்கள் அதிர்ச்சியில் உள்ளனர். இந்தத்திட்டங்கள் மட்டுமின்றி லால்குடிக்கு ரூ.250 கோடியில் லால்குடி - புள்ளம்பாடியில் கூட்டுக்குடிநீர் திட்டம், ரூ.51 கோடியில் லால்குடி அரசு மருத்துவமனைக்கு 12 அறைகள் கொண்ட புதிய கட்டிடம், ரூ.5 கோடியில் லால்குடி வட்டாட்சியர் அலுவலகம், ரூ.3 கோடியில் கால்நடை மருந்தகங்கள், ரூ.8 கோடியில் லால்குடி அரசு மருத்துவமனையில் 50 படுக்கைகள் கொண்ட புதிய கட்டடம், ரூ.4 கோடியில் லால்குடி - புள்ளம்பாடி சார்பதிவாளர் புதிய அலுவலகம், தொகுதி முழுவதும் ரூ.7 கோடியில் பல்வேறு பள்ளிகளுக்கு கட்டிடம் என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

லால்குடி பகுதிக்கு தொடர்ந்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்த இந்த அரசுக்கு அனைவரும் ஆதரவு தர வேண்டும். புதிய பேருந்து நிலையத்தை சிறப்பாக, சுத்தமாக, சுகாதாரமாக பராமரிக்க நகராட்சிக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்றார்.

## அதங்கோடு அரசு தொடக்கப் பள்ளி புதிய கட்டிட அடிக்கல் நாட்டு விழா நடந்தது



களியக்காவிளை, பிப்.17-

களியக்காவிளை அருகே அதங்கோட்டில் அரசு தொடக்கப் பள்ளி செயல்பட்டு வருகிறது இந்த பள்ளியின் ஆண்டு விழா மற்றும் புதிய கட்டிட அடிக்கல் நாட்டு விழா, விளையாட்டு விழா, பள்ளி மேலாண்மை குழு மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக விழா உள்ளிட்ட விழாக்கள் நடந்தது.

விழாவில் காலை தேசிய கொடி ஏற்றி வைக்கப்பட்டது. தொடர்ந்து நடந்த விழாவில் பள்ளி எஸ்.எம்.சி குழு தலைவி விமலாகுமாரி தலைமை வகித்தார். பள்ளி மாணவி அன்ஷிகா ஏஞ்சல் வரவேற்றார். பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக தலைவி சிந்து முன்னிலை வகித்தார். பள்ளி தலைமை ஆசிரியை குமாரி சுனீதி ஆண்டறிக்கை வாசித்தார். கிள்ளியூர் தொகுதி எம்.எல்.ஏ ராஜேஷ் குமார் தனது தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ 12 லட்சம் ஒதுக்கீடு செய்து புதிய கட்டிட அடிக்கல் நாட்டி பேசினார். தொடர்ந்து நடந்த நிகழ்ச்சியில் மாணவர் சங்க தலைவர் ராஜன், துணைத்தலைவர் சிவானந்தன், செயலாளர் ராஜேஷ் குமார், துணைச் செயலாளர் சிவகுமார், பொருளாளர் ஐயப்பன், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர். கலந்து கொண்டனர். மாணவி விஜி நன்றி கூறினார். மாணவர்கள் நிவதர்ஷிதா ஆதிஷ் உள்ளிட்டோர் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்கள்.


**தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்!**




**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் கீழ் பத்து கல்லூரிகள் 110 விதியின் கீழ் துவங்கப்பட்டது. நான்கு கல்லூரிகள் அரசுடைமை ஆக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள ஆறு கல்லூரிகள் (பணகுடி, திசையன்விளை, நாகம்பட்டி, சங்கரன்கோவில், கோவிந்த பேரி, புளியங்குடி) மட்டும் இன்னும் அரசுடைமை ஆக்கப்படாமல் அரசால் புறந்தள்ளப்படுகிறது. மாணவர்கள் நலனுக்காகவும், பேராசிரியர்களின் நலனுக்காகவும் அரசுக் கல்லூரி ஆக்க வேண்டும் என்று மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரிகளின் பேராசிரியர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை (10022026) முதல் வாயில் முழக்கப் போராட்டம்,கருப்புப் பேட்ஜ் போராட்டம் என பல வகைகளில் போராடி வருகின்றனர். நேற்று (16.02.2026) கல்லூரி பேராசிரியர்கள் கல்லூரி உள் இருப்புப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.**




**தென்தாமரைகுளம் எல்.எம்.எஸ். மேல்நிலைப் பள்ளியில் முன்னாள் மாணவர் சங்க கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு பள்ளியின் தாளாளர் கால்வின் தலைமை வகித்து தலைமை உரையாற்றினார். பள்ளி தலைமை ஆசிரியை அனு ஜெ பிரீதா முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினார். ஆசிரியை மேபல் வரவேற்புரையாற்றினார். ஆசிரியை ஜாண்சி ரீட்டா பள்ளி குறித்த வரலாற்றை எடுத்துக் கூறினார். ஆசிரியை அன்ன சுகந்தி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். ஆசிரிய செயலாளர் சாந்தி நன்றியுரை ஆற்றினார். நிகழ்ச்சியில் மாணவ மாணவிகளின் பரதநாட்டிய நிகழ்ச்சி, நடனங்கள் மற்றும் சிறப்பு பாடல்கள் இடம் பெற்றன. இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாணவ மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.**

## வெளிநாட்டினரை கவர்ந்த சிவாலய ஓட்டம் : ரஷ்ய நாட்டினர் 4 பேர் பங்கேற்பு

மார்த்தாண்டம், பிப்.17-

ரஷ்யாவை சேர்ந்த 4 வெளிநாட்டினர் முஞ்சிறை திருமலை, , திக்குறிச்சி, திற்பரப்பு என பனிரெண்டு ராசிகளின் பரிகார ஸ்தலமான சிவாலயங்களுக்கு சிவாலய ஓட்டம் சென்றனர். அவர்கள் திக்குறிச்சி மஹா தேவர் கோயிலுக்கு வந்த போது பக்தர்களோடு பக்தர்களாக வரிசையில் நின்று காணிக்கையிட்டு விபூதி பிரசாதம் வாங்கி கொண்டனர்.

தொடர்ந்து கோயிலில் முன் நின்று புகைப்படம் மற்றும் செல்ஃபி எடுத்து கொண்டனர். அப்போது



உள்ளூர் பக்தர்கள் சிலர் அவர்களோடு செல்ஃபி எடுத்து கொண்டனர். அவர்கள் பக்தர்களிடம் பேசியபோது இந்தியா தேசபக்தி தெய்வபக்தி அதிகம் கொண்ட நாடு. இந்தியாவின் ஆன்மீக கலாச்சாரம் மிகவும் பிடித்து இருப்பதாகவும் கோயிலுக்கு செல்லும் போது ஒரு பாசிட்டிவ் எனர்ஜி உடலில் கிடைத்ததாகவும் வித்தியாசமான புனித யாத்திரையாக இருப்பதாகவும் கூறினார்கள். முடிந்தால் அடுத்த ஆண்டு நண்பர்கள் சேர்ந்து குழுவாக வருவோம் என்று தெரிவித்தனர். கடந்த ஆண்டு அதன் முந்தைய ஆண்டுகளில் இது போன்று வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர். ஆண்டு தோறும் பல வெளிநாடுகளை சேர்ந்த பக்தர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் நடக்கும் மஹா சிவாலய ஓட்டம் மற்றும் சிவராத்திரி விழாவில் பங்கேற்று வருவது தொடர்கிறது.

# தென்காசியில் 125 நாள் வேலையை சீர்குலைக்கும் திமுக அரசை கண்டித்து

## அதிமுக தெற்கு மாவட்ட அவைத்தலைவர் தலைமையில் கூட்டணி கட்சிகளின் கண்டன ஆர்ப்பாட்டம்




தென்காசி, பிப்.17-

தென்காசி மாவட்டம் தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு கிராம மக்களின் 125 நாள் வேலை உறுதி திட்டத்தை சீர்குலைக்க முயற்சி செய்யும் ஸ்டாலின் அரசை கண்டித்து தென்காசி தெற்கு மாவட்டம் சார்பில் அதிமுக மாவட்ட கழக அவைத் தலைவர் சண்முகசுந்தரம் தலைமையில் அதிமுக மற்றும் கூட்டணி கட்சிகளின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தென்காசி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் சங்கரபாண்டியன் வரவேற்றார்.கூட்டத்தில் கிராம மக்களின் 125 நாள் வேலையை சீர்குலைக்கும் திமுக அரசையும் முதல்வர் ஸ்டாலினையும் கண்டித்து மாவட்ட இலக்கிய அணி செயலாளர் நெல்லை முகிலன், மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் சுப்பாராஜ், பாமக மாநில துணை தலைவர் சேது ஹரிஹரன், மாவட்ட செயலாளர் இசக்கிமுத்து, பாஜக மாவட்ட துணை தலைவர் முத்துக்குமார், அமமுக மாவட்ட செயலாளர் அருணகிரிசாமி, தமமுக மாவட்ட தலைவர் தவம் முன்னிலையில் கண்டன உரையாற்றி கண்டன கோஷங்கள் எழுப்பபட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தென்காசி நகர அதிமுக செயலாளர் சுடலை, அமமுக மாவட்ட பொருளாளர் இசக்கி பாண்டியன், மகளிரணி செயலாளர் வேலம்மாள், பேரூர் கழக செயலாளர் சிவசுப்பிரமணியன், பரமசிவம், பாஜக நகர தலைவர் சங்கரசுப்பிரமணியன் பாமக ஒன்றிய செயலாளர் சண்முகசுந்தரம் ,அதிமுக மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் பாலமுருகன், அங்கராஜ், வேம்பு ரவி, ஏசாயா குருபாதம், வைரமுத்து, உமா மகேஸ்வரன், பிரபு, நகர அவைத்தலைவர் முத்துகுமாரசாமி, மற்றும் வார்டு கழக செயலாளர்கள் கிளை கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ராமசந்திரன் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

## மாசி மஹா சிவராத்திரி திருவிழா வெள்ளி தேர் மற்றும் திருத்தேரோட்டம்





இராமேஸ்வரம்.பிப்.17-

ராமேஸ்வரம் ராமநாதசுவாமி திருக்கோவிலில் மாசி மஹா சிவராத்திரி திருவிழாவை முன்னிட்டு எட்டாம் நாள் திருவிழாவில் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட வெள்ளித்தேரில் வீதி உலாவும் ஓன்பதாம் நாள் திருவிழாவில் சுவாமி அம்பாள் திருத்தேரோட்டமும் நடைபெற்றது. இதில் பொது மக்கள் சுற்றுலா பயணிகள் ஓம் நமச்சிவாய என கோஷமிட்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர்.

ராமேஸ்வரம் ராமநாதசாமி திருக்கோவில் அகில உலக புண்ணிய ஸ்தலங்களில் ஒன்றாகவும் தீர்த்தம் மூர்த்தி ஸ்தலம் என முப்பெருமைகளை கொண்டதாகவும் விளங்குகிறது.இந்நிலையில் ராமேஸ்வரம் ராமநாதசாமி திருக்கோவிலில் ஆடி திருவிழா மற்றும் மாசி திருவிழாக்கள் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வரும் நிலையில் மாசி மகா சிவராத்திரியின் எட்டாம் நாள் திருவிழாவில் ராமநாதசுவாமி ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்பாளுக்கு நாயக்கர் வாசலில் சிறப்பு தீபாராதனை நடைபெற்ற பின்னர் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட வெள்ளித்தேரில் சுவாமி அம்பாள் நான்கு ரத வீதியில் வழியாக உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தனர். இதையடுத்து ராமநாதசுவாமி திருக்கோவிலில் மாசி மஹா சிவராத்திரி ஓன்பதாம் நாள் திருவிழாவில் மீன லக்னத்தில் பஞ்ச மூர்த்திகளுடன் புறப்பாடாகி சுவாமி அம்பாள் இரண்டு திருத்தேரில் நான்கு ரத வீதிகளிலும் உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தது.இதில் கோவில் இணை ஆணையர் செல்லத்துரை உதவி ஆணையர் ரவீந்திரன் செயல் அலுவலர் முத்துச்சாமி மேலாளர் வெங்கடேசன் கோட்ட பெரியாளர் மயில்வாகனன் உதவி பொறியாளர் ராமமூர்த்தி பேஷ்கார்கள் கமல்நாதன் நாகராஜன் பஞ்சமூர்த்தி நகர்மன்ற தலைவர் நாசர்கான் துணை தலைவர் தெட்சிணாமூர்த்தி நகர்மன்ற உறுப்பினர்கள் அரசியல் கட்சி பிரமுகர்கள் கோவில் பணியாளர்கள் அகில இந்திய யாத்திரை சங்க பணியாளர்கள் பொது மக்கள் வட மாநிலத்தை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் நான்கு ரத வீதிகள் வழியாக திருத்தேரை ஓம் நமச்சிவாயா என்ற முழக்கத்துடன் வடம் பிடித்து இழுத்து வந்தனர்.

## ஜல்லிக்கட்டு காளை காணவில்லை




உத்திரா ராஜா ஆகிய நான் கொசவபட்டி அருகிலுள்ள T. பஞ்சம்பட்டியில் வசித்து வருகிறேன். 13.02.2026 அன்று நடைபெற்ற நல்லமநாயக்கன்பட்டி ஜல்லிக்கட்டில் மாறன் குரூப்ஸ் சார்பில் போட்டியில் கலந்து கொண்டு வெளியே வந்த எனது காளையை காணவில்லை.

இதனை கண்டறியும் நல்ல உள்ளங்கள் உடனடியாக எனக்கு தகவல் கொடுக்கும்படி அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தொடர்பு கொள்ள வேண்டிய செல் நம்பர் :
9688635560
7305854095

உங்கள் அபிமான தினதமிழ் செய்திகளை Whatsapp - ல் பின் தொடர



மதுரை மாவட்டம் கருங்காலக்குடி அருகே உள்ள வஞ்சிப்பட்டி கிராமத்தில் அருள் பாளித்து வரும் அருள்மிகு ஸ்ரீ பட்டத்தரசி அம்மன் கோவிலில் மகா சிவராத்திரி விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் கிராம பக்தர்கள் அம்மனுக்கு கரகம் எடுத்து வந்து வேண்டுதலை நிறைவேற்றினர். இந்த நிகழ்வில் வஞ்சிப்பட்டி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் இருந்து பெருந்திரளான பக்தர்கள் வருகை புரிந்து சாமி தரிசனம் செய்தனர்.

## திருச்சி அருகே 61 அடி சிவலிங்கத்திற்கு சிவராத்திரியை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் செய்து பக்தர்கள் வழிபாடு



திருச்சி, பிப்ரவரி. 17 –

திருச்சி மாவட்டம் கூத்தைபார் மகா காளீஸ்வரி ஆலயத்தில் மகா சிவராத்திரியை முன்னிட்டு 61 அடி உயரமுள்ள சிவலிங்கத்திற்கு பால், தயிர், மஞ்சள், திருமஞ்சனம், திரவிய பொடி, நெய் உள்ளிட்ட பொருட்கள் கொண்டு பல வண்ண மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு அபிஷேக பூஜைகள் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு சிவனை கண்டு தரிசனம் செய்தனர்.



வேலூர் மாநகராட்சி சேண்பாக்கம் பகுதி 16வது வார்டில் அமைந்துள்ள சோளாபுரி அம்மன் ஆலயத்தின் 107ஆம் ஆண்டு மயானகொள்ளை விழாவையொட்டி குமரன் ஹால் சார்பில் பொதுமக்களுக்கு குடிநீர் மற்றும் குளிர்பானங்கள் வழங்கப்பட்டது. இதில் திமுக இளைஞரணி மாநகர துணை அமைப்பாளர் பன்னீர் செல்வம், ஜமுனா பன்னீர் செல்வம், மோகன் ஆகியோர் இருந்தனர்.

## கால்நடை வளர்ப்பில் விவசாயிகளுக்கு நவீன தொழில் நுட்ப பயிற்சி




பரமக்குடி ,பிப்ரவரி. 17–

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கால்நடை பராமரிப்பு துறை துணை இயக்குநர் டாக்டர். பெ.ரவிச்சந்திரன் தலைமையில் கோட்ட உதவி இயக்குநர் டாக்டர். மு.சுந்தரமூர்த்தி முன்னிலையில் தமிழ்நாடு அரசு, கால்நடை பராமரிப்புத் துறையில் தமிழ்நாடு முழுவதும் 40 ஆயிரம் விவசாயிகளுக்கு ஒன்றியத்திற்கு 100 விவசாயிகள் வீதம் கால்நடை வளர்ப்பில் சமீபத்திய முன்னேற்றங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பம் என்னும் தலைப்பில் ஒரு நாள் பயிற்சி நடைபெற்றது.

மேலும் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மைய பேராசிரியர் டாக்டர் விஜயலிங்கம் மற்றும் கால்நடை உதவி மருத்துவர்கள் அழகிரிசாமி, விக்னேஷ், தமிழ்மணி, புவனேஸ்வரி ஆகியோரால் நடத்தப்பட்டது.

இப்பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு தாது உப்பு கலவை, மண் புழு உரம், பயிற்சி கையேடு மற்றும் தீவன சோள விதைகள் இலவசமாக வழங்கப்பட்டது.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

# தூத்துக்குடி மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கு தீவிரமாக கண்காணிக்கப்படும் !

## புதிய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் சி.மதன் உறுதி !!



தூத்துக்குடி, பிப்.17-

தூத்துக்குடி மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கு தீவிரமாக கண்காணிக்கப்படும் என்று புதிய காவல் கண்காணிப்பாளராக டாக்டர் சி.மதன் தெரிவித்தார்.

தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி வந்த என்.சிலம்பரசன், சென்னை சட்டம் மற்றும் ஒழுங்கு பிரிவின் உதவித் தலைமை காவல் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக, திருநெல்வேலி மாநகர மேற்கு பகுதி துணை ஆணையராக பணியாற்றி வந்த டாக்டர் சி.மதன், தற்போது தூத்துக்குடி மாவட்டத்தின் புதிய காவல் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.இந்த நிலையில், தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக டாக்டர் சி.மதன் இன்று பொறுப்பேற்றுள்ளார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறியதாவது "காவல்துறை அடிப்படை பணிகள் குற்றம் தடுப்பு, புலனாய்வு பணிகளில் தீவிரமாக கவனம் செலுத்தப்படும். வருகிற சட்டமன்ற தேர்தல் அமைதியாக நடைபெற அரசியல் சார்பின்றி தேர்தல் விதிகள் கடுமையாக கடைபிடிக்கப்படும்.

பொதுமக்கள் சட்ட விதிமுறைகளை முறைப்படி கடைபிடிக்க வேண்டும். குறிப்பாக போக்குவரத்து விதிகளை கடைபிடிப்பது தனி மனித கடமை. குற்றவாளிகள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு குற்றங்களை தடுக்கும் வகையில் தூத்துக்குடி மாவட்ட காவல்துறை செயல்படும் என்று தெரிவித்தார். முன்னதாக மாவட்ட கூடுதல் கண்காணிப்பாளர்கள் திபு மற்றும் ஆறுமுகம், தனிப்பிரிவு இன்ஸ்பெக்டர் உமையொருபாகம் சுப்பிரமணியன் ஆகியோர் பூச்செண்டு கொடுத்து புதிய எஸ்பி-யை வரவேற்றனர்

## கல்வி சுற்றுலாவாக மலேசியா சென்று வந்த 10ம் வகுப்பு மாணவி சிவானிக்கு ராஜா எம்எல்ஏ வாழ்த்து




சங்கரன்கோவில்,பிப்.17-

சங்கரன்கோவில் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் மாநில அளவில் தமிழக அரசின் பள்ளி கல்வித்துறையின் சார்பில் நடைபெற்ற கல்வி சாரா மன்ற செயல்பாடுகளில் 2026 ஆம் ஆண்டுக்கான ஆங்கிலத்தில் பேச்சு போட்டி யில் சங்கரன்கோவில் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி பத்தாம் வகுப்பு மாணவி சிவானி பங்கு பெற்று பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்று கல்வி சுற்றுலாவாக மலேசியா சென்று வந்த மாணவிக்கு பாராட்டு விழா நிகழ்ச்சி பள்ளி தலைமை ஆசிரியை கீதா வேணி தலைமையில் நடைபெற்றது விழாவில் தென்காசி வடக்கு திமுக மாவட்ட செயலாளர் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ராஜா கலந்து கொண்டு மாணவிக்கு வாழ்த்து தெரிவித்து அவர் பேசுகையில் மாணவிகள் அனைவரும் தங்கள் கல்வி ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும் தமிழக அரசின் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் தற்போதைய திராவிட மாடல அரசின் பள்ளிக்கல்வித்துறை மூலம் மாணவ மாணவிகளை ஊக்கப்படுத்த கூடிய வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது தமிழக அரசு மாணவ மாணவிகள் அனைவரும் புத்தகங்கள் வாசிப்பு பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் வளர்த்துக் கொண்டால் சாதனைகள் புரிய ஏதுவாக இருக்கும் பாரம்பரிய கலைகள் அழிந்து வரும் நிலையில் பாரம்பரிய கலைகளை கற்றுக்கொள்ள வேண்டும் எனவும் ஆரோக்கியமான சூழ்நிலையை கருத்தில் கொண்டு உணவு பழக்க வழக்கத்தில் மிகுந்த அக்கறை கொள்ள வேண்டும் எனவும் நல்ல சத்தான உணவுகளை எடுத்துக் கொள்ள வேண்டியும் விழாவில் மாணவிகள் இன்வெர்ட்டர் வேண்டுமென எம்எல்ஏ ராஜாவிடம் கோரிக்கை வைத்தனர் அதனை உடனடியாக நிறைவேற்றப்படும் என ராஜா எம்எல்ஏ தெரிவித்தார் நிகழ்ச்சியில் நகராட்சி சேர்மன் கௌசல்யா வெங்கடேஷ், திமுக மாவட்ட பொருளாளர் சரவணன் நகர செயலாளர் பிரகாஷ் ஒன்றிய செயலாளர் பெரியதுரை மற்றும் ஜெயக்குமார் பாலாஜி பாரதிராஜா மற்றும் பள்ளி ஆசிரியர்கள் பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் பள்ளி மேலாண்மை குழுவினர் மாணவிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்




சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டத்திற்குட்பட்ட தாயமங்கலம் கிராமத்தில் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் கட்டப்பட்டுள்ள வீடுகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.திறப்பு விழாவில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பங்கேற்று குத்துவிளக்கேற்றி சிறப்பித்தார். உடன் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் தே.ஜெஃபி கிரேசியா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் செயற்பொறியாளர் இந்துமதி, திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கை மாறன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் பாஜக அரசையும் அதற்கு துணை போகும் அதிமுகவையும் கண்டித்து கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட மாடல் மு.க ஸ்டாலின் ஆணையின்படியும் கழக துணை பொதுச்செயலாளர் மக்களவை பாராளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அறிவுறுத்தலின் படியும் சமூக நலத்துறை மற்றும் மகளிர் மேம்பாட்டுத் துறை அமைச்சர் தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழக செயலாளர் றி.கீதாஜீவன் வழிகாட்டுதலின் படியும் கயத்தார் மேற்கு ஒன்றியம் கழுகுமலை பேரூர் கழக திமுக மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பாக கழுகுமலை காந்தி மைதானத்தில் வைத்து நேற்று மாலை அளவில் கயத்தார் மேற்கு ஒன்றிய செயலாளரும் பேரூராட்சி மன்ற துணைத் தலைவருமான கழுகுமலை அ.சுப்பிரமணியன் தலைமையில் கழுகுமலை பேரூர் கழக செயலாளர் ரா.கிருஷ்ணகுமார் அவர்கள் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள், பேரூர் கழக நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், மற்றும் கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# புனித வெள்ளியன்று மதுக்கடைகளை மூட நடவடிக்கை எடுக்க வேண்டும்

## மாவட்ட ஆட்சியரிடம் தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் மனு



தூத்துக்குடி, பிப்.17-

தமிழகம் முழுவதும் மதுக்கடைகளை மூட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் ஸ்டீபன் அந்தோணி கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பாக அவர் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியருக்கு விடுத்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது :- கிறிஸ்தவர்களின் மிக முக்கிய நம்பிக்கையான இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை நினைவு கூரும் புனித வெள்ளி அன்று, கிறிஸ்தவர்கள் இரத்ததான முகாம்கள் நடத்துதல், சிலுவைப் பாதை ஊர்வலங்கள் மற்றும் ஏழைகளுக்கு அன்னதானம் வழங்குதல் போன்ற பணிகளில் ஈடுபடுகின்றனர். இந்த நாளை ஒரு தியாக நாளாகக் கருதி கடைபிடிப்பதால், அன்று மதுக்கடைகளை மூட வேண்டியது அவசியமாகும்.

டெல்லி மற்றும் கேரளா போன்ற மாநிலங்களில் புனித வெள்ளியன்று ஏற்கனவே மதுக்கடைகள் மூடப்படுகின்றன. அதே போல் தமிழகத்திலும் மகாவீர் ஜெயந்தி, மிலாடி நபி, வள்ளலார் நினைவு நாள் போன்ற முக்கிய தினங்களில் மதுக்கடைகள் மூடப்படுவதை வரவேற்கும் ஆயர், அந்தப் பட்டியலில் புனித வெள்ளியையும் சேர்க்க வேண்டும் என்று முதலமைச்சருக்குப் பரிந்துரைக்குமாறு ஆட்சியரை கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாகவே சிறுபான்மையினர் நல ஆணையம் மற்றும் பல்வேறு மதுவிலக்கு இயக்கங்கள் வாயிலாக இந்தத் தொடர் கோரிக்கை தமிழக அரசுக்கு முன்வைக்கப்பட்டு வருவதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழக அரசு படிப்படியாக மதுக்கடைகளைக் குறைத்தல் மற்றும் மது போதைக்கு அடிமையானவர்களுக்கான மறுவாழ்வு இல்லங்கள் அமைத்தல் போன்ற முயற்சிகளை மேற்கொண்டு வருவதைப் பாராட்டியுள்ள ஆயர், மக்களின் சமய கலாச்சார விழாக்களின் மாண்பைக் காக்க அரசு முன்வர வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். இந்த மனுவினை தூத்துக்குடி மறைமாவட்ட முதன்மை குரு ஜோசப் ரவி பாலன், தலைமைச் செயலர் சகாய லூரின் மற்றும் மதுவிலக்கு சபை இயக்குனர் ஜெயந்தன் டி கிரேஸ் ஆகியோர் மாவட்ட ஆட்சியரிடம் அளித்தனர்.

# களியக்காவிளை அருகே செங்கல் சிவ பார்வதி கோயிலில் சிவராத்திரி விழா



களியக்காவிளை, பிப்.17-

களியக்காவிளை அருகே செங்கல் சிவ பார்வதி கோவில் சிவராத்திரி விழா பிப்ரவரி 3-ம் தேதி துவங்கியது. தொடர்ந்து பல்வேறு பூஜைகள், கலை நிகழ்சிகள் நடந்தது. விழாவின் நிறைவு நாளான நேற்று முன்தினம் மாநாடு நடந்தது. இதில் கேரளா மாநில ஆளுனர் ராஜேந்திர விஸ்வநாத் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

தொடர்ந்து அதிருத்ர மகாயக்ஞம் மற்றும் மகாசிவராத்திரி மஹோத்சவத்தின் நிறைவு அமர்வைத் தொடங்கி வைத்துப் பேசினார். கோயிலின் தலைவர் சுவாமி மகேஸ்வரானந்த சரஸ்வதி விழாவிற்கு தலைமை தாங்கினார். காந்திமித்ரா மண்டலத் தலைவர் வழக்கறிஞர் ஜெயச்சந்திரன் நாயர் வரவேற்றார். நெய்யாட்டின்கரா எம்.எல்.ஏ கே. அன்சலன், கோவளம் எம்.எல்.ஏ எம். வின்சென்ட், உதய சமுத்திர குழுமத்தின் எம்.டி. எஸ். ராஜசேகரன் நாயர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தேசிய கீதத்துடன் மாநாடு நிறைவடைந்தது.

# தருமபுரி மாவட்ட நாம் தமிழர் கட்சி சார்பில் பேருந்து நிலையம் இடம் மாற்றம் செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து கண்டன ஆர்ப்பாட்டம்




தருமபுரி, பிப்ரவரி. 17-

தருமபுரி மாவட்ட நாம் தமிழர் கட்சி சார்பில் புறநகர் பேருந்து நிலையம் இடமாற்றம் செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பழைய புறநகர் பேருந்து நிலையத்தில் மாநில ஒருங்கிணைப்பாளர் சந்தோஷ் குமார் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தருமபுரி சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் சாந்தலட்சுமி, மண்டல செயலாளர் சிவகுமார், மாவட்ட தலைவர் சிலம்பரசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தருமபுரி பேருந்து நிலையம் மாற்றப்படக் கூடாது!

மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையில் பேருந்துகள் மாற்றம் செய்யக் கூடாது! அனைத்து வழித்தட பேருந்துகளை பழைய புறநகர் பேருந்து நிலையத்தில் இயக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் காவல்துறையினர் அனைவரையும் கைது செய்து தனியார் திருமண மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர்.



**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமைச்செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக உயர்கல்வித் துறையின் சார்பில் ஈரோடு சிக்கைய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் குடிமைப்பணி பயிற்சி மையம், நூலகம் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைத்தார். இதை தொடர்ந்து வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி பணிகளை துவக்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் செல்வராஜ், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, கல்லூரி முதல்வர் திருகுமரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.**




# தருமபுரியில் மகா சிவராத்திரியை முன்னிட்டு அனைத்து சிவன் கோவில்களும் சிறப்பு வழிபாடு



தருமபுரி, பிப்ரவரி. 17-

தர்மபுரியில் உள்ள அனைத்து சிவன் கோவில்களிலும் மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு அந்தந்த கோவில்களில் நான்கு கால சிறப்பு அபிஷேகம், ஆராதனைகள் மற்றும் வழிபாடுகள் நடைபெற்றது. ஒவ்வொரு கால பூஜையை தொடர்ந்து பக்தர்களுக்கு சிறப்பு பிரசாதங்கள் வழங்கப்பட்டது. தருமபுரி கடை வீதியில் உள்ள ஸ்ரீ அம்பிகா பரமேஸ்வரி உடனாகிய ஸ்ரீ மருதவாணேஸ்வரர் திருக்கோவிலில் மகா சிவராத்திரியை முன்னிட்டு நான்கு கால சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இந்த பூஜையில் சுற்றுவட்டாரத்தில் உள்ள அனைத்து சிவன் அடிகளார்கள் மற்றும் பக்தர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். பூஜையில் கலந்து கொள்ள அனைவருக்கும் பிரசாதங்கள் விழா குழுவின் சார்பில் வழங்கப்பட்டது.

# களியக்காவிளையில் பள்ளத்தில் தவறி விழுந்த வாலிபர் பரிதாபமாக உயிரிழப்பு



களியக்காவிளை, பிப்.17-

களியக்காவிளை பி.பி.எம் சந்திப்பில் இருந்து கைதக்குழிக்கு பிரிந்து செல்லும் ஒற்றையடி பாதை உள்ளது. இந்த பாதை வழியாக நடந்து சென்ற வாலிபர் சம்பவ தினம் பள்ளத்தில் தவறி விழுந்துள்ளார். இரவு நேரமானதினால் யாரும் கவனிக்கவில்லை. இதில் பலத்த காயம் அடைந்த சுமார் 40 வயது உடைய வாலிபர் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

ஐந்து நாட்கள் கழித்து நேற்று முன்தினம் சடலத்தை பார்த்த அப்பகுதியினர போலீசுக்கு தகவல் கொடுத்துள்ளனர். போலீசார் சம்பவ இடம் சென்று சடலத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு ஆசாரிபள்ளம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்துள்ளனர். இறந்தவர் யார்? எந்த ஊரை சேர்ந்தவர் என்பது தெரியவில்லை.

இது குறித்து களியக்காவிளை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# காட்டிநாயனப்பள்ளி கிராமத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றியை பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் திறந்து வைத்தார்



கிருஷ்ணகிரி, பிப். 17-

கிருஷ்ணகிரி அருகே உள்ள காட்டிநாயனப்பள்ளி கிராமத்தில் குறைந்த மின் அழுத்தத்தினால் மக்கள் மிகவும் அவதிப்பட்டு வந்தனர். இதனால் காட்டிநாயனப்பள்ளியில் மினி டிரானஸ்பார்மார் அமைத்து சீரான மின் வினியோகம் வழங்கப்படவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறை வேற்றிடும் வகையில் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து சுமார் 6 லட்சம் நிதி ஒதிக்கீடு செய்யப்பட்டு

மினி டிரான்ஸ்பார் அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இந்த விழாவில் கலந்துக் கொண்ட சட்டமன்ற உறுப்பினரும் கிழக்கு மாவட்ட திமுக செயலாளருமான மதியழகன் கலந்து கொண்டு சுமார் 6 லட்சம் மதிப்பீட்டில் அடைக்கப்பட்ட மின் மாற்றி டிரான்ஸ்பார்மரை மக்கள் பயன்பட்டிற்காக துவக்கி வைத்து, அங்கு கூடி இருந்த பொதுமக்கள் அனைவருக்கும் இனிப்புகளையும் வழங்கினார். அப்போது நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றி வைத்த சட்ட மன்ற உறுப்பினர் மதியழகனுக்கு தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர். இந்த விழாவின் போது

ஒன்றிய செயலாளர் நாராயணன், திமுக ஒன்றிய நிர்வாகி ராமச்சந்திரன், கிருஷ்ணகிரி நகர செயலாளர் அஸ்லாம்ரகுமான் செரிப், வேலுமணி, ஆனந்தன். பாண்டுங்கன், வேலாயுதன் , மாணிக்கம்,

மின்வாரிய உதவி இயக்குனர் சிதம்பரம், உதவி செயற்பொறியாளர் மாரியப்பன், மின்வாரிய ஆய்வாளர் ராஜேந்திரன், ஃபோர்மேன் வெங்கடேஷ், லைன்மேன் சேகர், சிவன், கேங்மேன் நவீன், பிரகாஷ் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர்.

# தூத்துக்குடியில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர்இளம்பகவத் நலஉதவிகள் வழங்கினார்



தூத்துக்குடி, பிப்.17-

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த பொதுமக்கள் கல்வி உதவித்தொகை மற்றும் முதியோர்/விதவை உதவித்தொகை, இலவச வீட்டுமனைப் பட்டா மற்றும் பட்டா மாறுதல் உத்தரவுகள், கலைஞரின் கனவு இல்லம், தொழில் கடனுதவி மற்றும் வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 950 மனுக்களை அளித்தனர்:

மனுக்களைப் பெற்றுக்கொண்ட ஆட்சியர், அவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுத்து தகுதியுள்ள பயனாளிகளுக்கு விரைந்து தீர்வு காண துறை சார்ந்த அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். முன்னதாக, 13 மாற்றுத்திறனாளிகளை நேரில் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்த ஆட்சியர், கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.

கடந்த 06.12.2025 அன்று தமிழக முதலமைச்சரால் காலாங்கரையில் திறந்து வைக்கப்பட்ட புதிய அறிவுசார் மையத்தின் சாவியை, இன்றைய கூட்டத்தில் ஆட்சித் தலைவர் மகளிர் குழுவிடம் ஒப்படைத்தார்.

கூட்டத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட பிற உதவிகளை ஆட்சியர் வழங்கினார். மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் சார்பில் 5 பயனாளிகளுக்கு தலா ரூ.5,479 மதிப்பிலான தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

பனை விதைகள் நடும் நெடும் பணி 2025" திட்டத்தில் சிறப்பாகச் செயல்பட்டு, நீர்நிலைகளில் பனை விதைகளை நட்டதற்காக Mother Social Service Trust மற்றும் கிராம உதயம் இயக்கம் ஆகிய தொண்டு நிறுவனங்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இரவிச்சந்திரன், மாவட்ட வன அலுவலர் இளையராஜா, ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் சேதுராமலிங்கம் (பொது), உலகநாதன் (சத்துணவு), மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் பென்னட் ஆசீர், மாற்றுத்திறனாளி நல அலுவலர் பிரமநாயகம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை முடித்துக் கொண்ட பர்கூர் அரசு கல்லூரி விரிவுரையாளர்கள்



கிருஷ்ணகிரி, பிப்.17-

கிருஷ்ணகிரி மாவட்டம் பருகூரில் உள்ள அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பணியாற்றும் கௌரவ விரிவுரையாளர்கள் தங்களது வாழ்வாதாரம் சார்ந்த அடிப்படை கோரிக்கைகளை வலியுறுத்தி வாயில் முழக்கப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

அதனைத் தொடர்ந்து செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, திங்கள் (10, 11, 12, 13, 16) ஆகிய ஐந்து நாட்களும் பணிகளைப் புறக்கணித்து அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பல்வேறு வடிவங்களில் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கல்லூரிகளிலும் பணியாற்றும் கௌரவ விரிவுரையாளர்கள் சென்னை சைதாப்பேட்டையில் உள்ள கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் தங்களின் ஐந்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் கல்லூரி அளவிலான பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை முடித்துக் கொண்டனர்.

இந்த பணிப் புறக்கணிப்பு போராட்டத்திற்கு முனைவர் ம. பழனி தலைமைத் தாங்கினார். முனைவர் த. அன்பழகன் முனைவர் சுவாமிநாதன் செல்வி ஆனந்தி முனைவர் மனோன்மணி முனைவர் அருணா முனைவர் பாமினி முனைவர் உமாமகேஸ்வரி முனைவர் வரலட்சுமி முனைவர் தனலட்சுமி முனைவர் சண்முக சுந்தரம் முனைவர் சித்திக் ராஜா முனைவர் சுரேஷ் முனைவர் சிவக்குமார் முனைவர் காமராஜ் திரு வெங்கடேசன் முனைவர் சரண்ராஜ் முனைவர் அசோக் குமார் முனைவர் பமீலா சாந்தி பிரபாவதி கிருஷ்ணவேணி கலைவாணி ஆகியோர் முன்னிலை வகித்து வந்தனர்.



**கோவை ஒனம்பாளையத்தில் டெல்லி பப்ளிக் பள்ளி அருகில் உள்ள தனியார் மைதானத்தில் தமிழக வெற்றி கழகம் தேர்தல் கலத்தின் ஸ்டிக்கர் அறிமுக விழா கோவை மாநகர் மாவட்ட செயலாளர் வி சம்பத்குமார் அணிவகுத்து நின்ற இருசக்கர வாகனம்,கார்,டாட்டா ஏசி,மூன்று சக்கர வாகனம் போன்ற 150–க்கும் மேற்பட்ட வாகனங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டி துவக்கி வைத்தார்.இதில் திரளான தொண்டர்கள் விசில் அடித்தும் விழாவை சிறப்பித்தனர்.**




**திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தாலுகாவில் நலத்திட்ட உதவி வழங்கும் விழா தமிழக வெற்றி கழகம் சார்பாக நடைபெற்றது இந்த விழாவில் மாவட்ட செயலாளர் தேவாமற்றும் மாவட்ட பொறுப்பாளர் விக்கி தலைமையில் நலத்திட்ட உதவி விழா நடத்தப்பட்டது விழாவை முன்னிலை நின்று நடத்திய ஒன்றிய செயலாளர் ராஜா வடக்கு ஒன்றிய செயலாளர் அய்யனார்மற்றும் பேரூர் கழக செயலாளர் அன்பு தம்பி பிரேம் மற்றும் ஏ பரசுராமன் சி எஸ் வாசன் மற்றும் கழகத் தொண்டர்கள் கலந்து கொண்டு இந்த நலத்திட்ட உதவிகளை சீரும் சிறப்புமாக விழாவை நடத்தினர்**

# பரமக்குடி அரசு கலைக்கல்லூரியில் கவுரவ விரிவுரையாளர்கள் யாசகம் கேட்டு போராட்டம்



பரமக்குடி, பிப்.17-

பரமக்குடி அரசு கலைக் கல்லூரியில் கவுரவ விரிவுரையாளர்கள் 6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, பணி புறக்கணிப்பு செய்து மாணவர்களிடம் யாசகம் கேட்டு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தமிழகம் முழுவதும் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சுமார் 7000 திற்கு மேற்பட்ட கௌரவ விரிவுரையாளர்கள் பணியாற்றி வருகின்றனர். பணி நிரந்தரம், நீதிமன்ற உத்தரவின்படி யுஜிசி ஊதியம் 57, 800, பெண் கவுரவ விரிவுரையாளர்களுக்கு சம்பளத்தும் கூடிய மகப்பேறு விடுப்பு, 12 மாத சம்பளம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பணியை புறக்கணித்து.சென்னையில் போராடி வருகின்றனர். இந்த நிலையில் பரமக்குடி அரசு கலை கல்லூரியில் பணியாற்றக்கூடிய 40 பெண் கவுரவ விரிவுரையாளர்கள் உட்பட 60 கௌரவ விரிவுரையாளர்கள் கடந்த 4 நாட்களாக கையெழுத்து இடாமல் பனியை புறக்கணிப்பு செய்து உள்ளிருப்பு போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.நேற்று, மாணவர்களிடம் யாசகம் கேட்டு கண்ணை கட்டிக்கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷமிட்டனர் .



மதுரை மாவட்டம், சுப்பிரமணியபுரத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய அடுக்குமாடி குடியிருப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# ஜெயலலிதா பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா



கோவை, பிப். 17-

கோவை புறநகர் வடக்கு மாவட்டம் கவுண்டம்பாளையம் மேற்கு பகுதி 16 ஏ வட்ட கழகம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகளை கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் பிஆர்ஜி அருண்குமார் வழங்கினார்.

உடன் கவுண்டம்பாளையம் மேற்கு பகுதி செயலாளர் சின்னு (எ) சின்னசாமி மற்றும் 16ஏ வட்ட கழக செயலாளர் கார்த்திகா மணிகண்டன் மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வார்டு கழக நிர்வாகிகள் மகளிர் சேர்ந்த நிர்வாகிகள் சார்பணி நிர்வாகிகள் கூட்டணி சேர்ந்த நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# பொள்ளாச்சி என்.ஜி.எம். கல்லூரியில் சிறப்பு கவியரங்கம்!



கோவை, பிப். 17-

பொள்ளாச்சி என்.ஜி.எம் கல்லூரித் தமிழ் இலக்கியத் துறையின் சார்பில், உலகத் தாய்மொழிநாளை முன்னிட்டு தமிழும் நாமும் எனும் தலைப்பில் சிறப்புக் கவியரங்கம் நடைபெற்றது.

தொடக்கமாக தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் முனைவர் த.ராஜ்குமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் இரா. மாணிக்கச் செழியன் அவர்கள் முன்னிலை வகித்தார் .

இதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினரை அவைக்கு முனைவர் சு.செல்வக்குமார் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்.

ஆசிரியரும் கவிஞருமான இளையவன் சிவா அவர்கள் கவியரங்கத் தலைமையேற்று நெறிப்படுத்தி தமிழும் நாமும் எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.


நிகழ்வில் தமிழ் இலக்கியத்துறையின் 14 இளங்கவிகள் பங்கேற்றுப் பல்வேறு தலைப்புகளில் தங்களின் கவிதைகளை வழங்கி மகிழ்ந்தார்கள். தாயும் தமிழும், தமிழின் சிறப்பு போன்ற தலைப்புகள் மிகச் சிறப்பான கவிதைகளுக்கு அடித்தளமிட்டன. இவர்களின் கவிதைகளில் சமூகச் சிந்தனைகளும் புதியப் புதிய சொற்சித்திரங்களும் ஒளிர்ந்தது.

நிகழ்வை நல்லதொரு முறையில் ஒருங்கிணைத்த பேராசிரியர் முனைவர் மு. காமராஜ் அவர்கள் நன்றியுரையுடன் நிகழ்வு முடிவுற்றது.



தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து, காணொளிக்காட்சி வாயிலாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக, ரூ.100 கோடி மதிப்பில் ஓசூர் அரசு மருத்துவமனை மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தி தரை தளத்துடன் கூடிய ஆறு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள புதிய மருத்துவமனைக் கட்டடத்தை திறந்து வைத்தார். அதனைத்தொடர்ந்து, ஓசூர் அரசு மருத்துவமனை மாவட்ட தலைமை மருத்துவமனையில், கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் .கே.கோபிநாத், ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் .ஒய்.பிரகாஷ், ஓசூர் மாநகராட்சி மேயர் .எஸ்.ஏ.சத்யா, ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் .முகம்மது ஷபீர் ஆலம் ஓசூர் சார் ஆட்சியர் .ஆக்ரிதி சேத்தி இ.ஆ.ப., ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி வைத்தனர். உடன், ஓசூர் மாநகராட்சி துணை மேயர் .ஆனந்தைய்யா, இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.மோகனபானு, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் .செந்தில் குமார், ஓசூர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் .அக்ஷய் அனில் வாகாரே உள்ளிட்ட பலர் உள்ளனர்.



வேலூர் மாநகராட்சி சேண்பாக்கம் பகுதி 16வது வார்டில் அமைந்துள்ள சோளாபுரி அம்மன் ஆலயத்தின் 107ஆம் ஆண்டு மயானசூறை விழா நாட்டாமை எஸ்.எம்.பாபு, நிர்வாக ஆலோசகர் நரசிம்மன், உதவி நாட்டாமை வடிவேலன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. சேண்பாக்கம் வீதியில் அம்மன் அலங்காரம் செய்து வீதி உலா வந்தது. விழாவில் சிறப்பு அழைப்பாளராக தமிழக வெற்றிக்கழக வேலூர் கிழக்கு மாவட்ட செயலாளர் ஏ.நவீன் குமார் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார். உடன் மாவட்ட பொருளாளர் நவீன், இளைஞர் அணி அமைப்பாளர் வெங்கட், பொதுக்குழு உறுப்பினர் சாரங்கம், ருத்ரவேணி இளைஞர் அணி இணை அமைப்பாளர் லோகேஷ், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கார்த்தி, சாரங்கம், பகுதி செயலாளர் நாகராஜ், பகுதி இணை செயலாளர் அறிவழகன், ஏ.பிரேம், சுரேஷ், 16 வது வார்டு செயலாளர் சோனு உள்ளிட்டோர் உடன் இருந்தனர். பின்னர் அப்பகுதி மக்களுக்கு தவெக சார்பில் சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டது.

# மகா சிவராத்திரி விழாவில் நடந்த நாட்டியாஞ்சலி மாணவிகளுக்கு பாராட்டு



கிருஷ்ணகிரி, பிப்.17-

கிருஷ்ணகிரி அருகே அமைந்துள்ள, சுமார் 800 ஆண்டுகள் பழமை வாய்ந்த கால பைரவர் திருக்கோவிலில் நடைபெற்ற மஹாசிவராத்திரியை முன்னிட்டு நடைப்பெற்ற நாட்டியஞ்சலி நிகழ்ச்சியில் கலந்துக் கொண்ட மாணவிகளுக்கு கோவில் நிர்வாகம் சார்பில் நினைவு பரிசு வழங்கப்பட்டது.

கிருஷ்ணகிரி அருகே உள்ள பெரிய ஏரிக்கரையில், சுமார் 800 ஆண்டுகள் பழமைவாய்ந்த கால பைரவர் திருக்கோவிலில், மஹாசிவராத்திரி விழா கடந்த மூண்று நாங்களாக பூஜைகள் வெகு விமரிசையாக நடைபெற்று வந்தது,,

மஹா சிவராத்திரியை முன் நள்ளிரவு முதல் தொடர்ந்து நடைபெற்ற இந்த சிறப்பு பூஜையின் போது, கால பைரவர் சுவாமிக்கு சிறப்பு அலங்கார பூஜைகளும், அலங்கார கற்பூரதீபாராதனைகளும் நடைபெற்றது. மஹா சிவராத்திரியையொட்டி, கிருஷ்ணகிரியை சேர்ந்த ஸ்ரீ சிவபால நாட்டிய பள்ளி மாணவிகளின் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சியும், இதனைத்தொடர்ந்து, மகாபார சொற்பொழிவாளர் கோவிந்தராஜ் அவர்களின் இரவு முழுவதும் மஹா சிவராத்திரி குறித்த பத்தி சொற்பொழிவும், நடைபெற்றது, இரவு முழுவதும் நடைபெற்ற மஹா சிவராத்திரி பூஜையில், ஏராளமான பக்தர்கள் கலந்துக் கொண்டு வழிப்பட்டனர்.

பின்னர் சிறப்பாக நடனம் மாடிய நாட்டியஞ்சலி மாணவிகளுக்கு கலாப்பைரவர் திருக்கோவில் நிர்வாகிகள் நினைவு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை, கால பைரவர் திருக்கோவிலின் நிர்வாகிகள் சிறப்பாக செய்து இருந்தனர்.



ஈரோடு மாவட்ட வாக்காளர் பட்டியல் பார்வையாளர் ராகுல் நாத் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி முன்னிலையில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டமன்றத்தொகுதிகள் மற்றும் நாமக்கல் மாவட்டத்திற்குட்பட்ட குமாரபாளையம், திருச்செங்கோடு ஆகிய சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 தொடர்பான பணிகளின் முன்னேற்ற நிலை, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தம் ஆகியவை, படிவம் 6, 7 மற்றும் 8 ஆகிய மனுக்களின் பரிசீலனை, வாக்காளர் பட்டியல் துல்லியமாகவும் பிழையற்றதாகவும் தயாரித்தல், வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களின் தரவு முரண்பாடுகளைச் சரிசெய்வது மற்றும் வாக்குச்சாவடி மறுசீரமைத்தல் உள்ளிட்ட பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் சாந்த குமார், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித்ஜெயின் கோபிசெட்டிபாளையம் சார்ஆட்சியர் சிவானந்தம் ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, அனைத்து சட்டமன்ற தொகுதிகளின் வாக்காளர் பதிவு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தருமபுரி மாவட்ட அதிமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்



தருமபுரி, பிப்ரவரி. 17-

தருமபுரி மாவட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜன் தலைமையில் குண்டலப்பட்டியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாவட்ட செயலாளர் கே. பி. அன்பழகன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் எஸ். ஆர். வெற்றிவேல், பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தசாமி, அண்ணா தொழிற்சங்க மாவட்ட செயலாளர் பழனிச்சாமி ,விவசாய அணி டி. ஆர். அன்பழகன், மாநில மருத்துவ அணி இணைச் செயலாளர் அசோகன், நகர செயலாளர் பூக்கடை ரவி ஆகியோர் கலந்து கொண்டு முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 78 - வது பிறந்தநாள் விழாவை மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்படுவதை குறித்தும் மற்றும் சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்தும் நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார்கள். இந்த கூட்டத்தில் மாநில, மாவட்ட, நகர ,பேரூர், ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி பயணியர் நிழற்குடை திறந்து வைத்தார்!



இராமநாதபுரம் பிப்,17

இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம், சக்கரக்கோட்டை ஊராட்சி, குமரய்யா கோவில் பேருந்து நிறுத்தத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ 7 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட பயணியர் நிழற்குடையை மக்களின் பயன்பாட்டிற்காக இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி திறந்து வைத்தார்,இந்நிகழ்வில், இ.யூ.மு.லீக் மாநில பொருளாளர் எம்.எஸ்.ஏ ஷாஜகான், திமுக இராமநாதபுரம் தெற்கு ஒன்றிய செயலாளர் பிரபாகரன், மாவட்ட ஊராட்சிக்குழு முன்னாள் துணை தலைவர் வேலுச்சாமி, வட்டார வளர்ச்சி அலுவலர் சுதாகர், உதவி செயற்பொறியாளர் ரமேஷ், பரமக்குடி நகர்மன்ற துணை தலைவர் குணா, மதிமுக மாநில மீனவரணி செயலாளர் பேட்ரிக், மதிமுக மாவட்ட செயலாளர் சுரேஷ், இ.யூ.மு.லீக் மாநில துணை செயலாளர் பி.எம்.அப்துல் ஜப்பார், மாவட்ட தலைவர் வருசை முகம்மது, மாவட்ட துணை தலைவர்கள் சாதுல்லாகான், கமால் முஸ்தபா, இளைஞரணி மாநில துணைத் தலைவர் கீழை என்.நெய்னா முகம்மது, மாநில தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் முகம்மது சாபிர்கான், மாவட்ட இளைஞரணி தலைவர் கதியத்துல்லா, மாவட்ட இளைஞரணி துணை செயலாளர் துபைல், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சுல்தான் சலாவுதீன், எஸ்.டி.யூ மாவட்ட பைரோஸ் கான், இராமநாதபுரம் நகர தலைவர் முகம்மது காசிம், நகர செயலாளர் சிராஜுதீன், திருப்பாலைக்குடி பிரைமரி தலைவர் மீராஉசேன், பாரதிநகர் பிரைமரி தலைவர் சாகுல் ஹமீது, கீழக்கரை நகர இளைஞரணி இலியாஸ், என்.முகம்மது பாரூக், திமுக மாவட்ட பிரதிநிதி பாம்பன் சுல்தான், சக்கரக்கோட்டை பஞ்சாயத்து பொதுமக்கள் பொதுநல சங்க தலைவர் வெற்றிவேல், ஒருங்கிணைப்பாளர் செந்தில் குமார், இணை ஒருங்கிணைப்பாளர் இராமநாதபாண்டியன், துணை ஒருங்கிணைப்பாளர் முகம்மது அப்துல் நாசர், துணை செயலாளர் ஞானசேகரன், துணை தலைவர் முகம்மது சாதிக், செயற்குழு உறுப்பினர் முனியசாமி, ஐந்திணை குடியிருப்போர் நலச்சங்கம் தலைவர் சின்ன கருத்த பாண்டியன், சட்ட ஆலோசகர் அசோகன், பாலமுருகன், ரமேஷ் பாபு, பாபு சேனா, செந்தில் குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பொள்ளாச்சி சேரன் நகர் பொதுமக்கள் கொண்டாடிய ஒற்றுமை திருவிழா!



கோவை, பிப்.17–

பொள்ளாச்சி ஆச்சி பட்டி பஞ்சாயதிற்க்கு உட்பட்ட சேரன் நகர் சுற்றியுள்ள லட்சுமி நகர்,தமிழ் மணி நகர், சுப்பையா நகர், முருகன் லே–அவுட், ஜி.ஐ.சி காலனி போன்ற பகுதிகளை உள்ளடக்கிய பொதுமக்கள் சார்பில் நடைபெற்ற ஒற்றுமை திருவிழா நடைபெற்றது.

இந்த விழாவில் விளையாட்டு போட்டிகள் ரன்னிங் ரேஸ்,சைக்கிள் ரேஸ், லெமன் டீ ஸ்பூன்,கயிறு இழுக்கும் போட்டி, ஓவியப்போட்டிகள் ஆகியவை குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான கலை நிகழ்ச்சிகள் போன்றவை நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற 300–க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பெண்களுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு தேங்காய் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் பட்டீஸ்வரன் அவர்கள் தலைமை வகித்தார்.

கோவை தெற்கு மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் சேரன் நகர் சுரேஷ் அவர்கள் முன்னிலை வைத்தார்.

மாநில தூய்மை பணியாளர் வாரிய தலைவர் திப்பம்பட்டி ஆறுச்சாமி அவர்கள் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார். முன்னாள் தலைவர் தென் சங்கம்பாளையம் அண்ணாதுரை, போடிபாளையம் முன்னாள் தலைவர் ராஜா சரவணன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். நிகழ்விற்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



வேலூர் மாவட்டம் காட்பாடி அடுத்த கழிஞ்சூரில் 187 ஆம் ஆண்டு மயான கொள்ளை திருவிழாவை முன்னிட்டு அம்மன் தேர் அலங்கரிக்கப்பட்டு வீதிவீதியாக ஊர்வலம் வந்து பின்னர் பாலாற்றங்கரையில் சூறை நடைபெற்றது. இதனையொட்டி தேமுதிக புறநகர் மாவட்ட செயலாளர் கே.பி.பிரதாப் தலைமையில் சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் ஏ.கே.கோபிநாத், ஜேசிபி.சுரேஷ், குட்டி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.